பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 12 2024 **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. மகாராஷ்ட்ரா முதலமைச்சராக திரு தேவந்திர பட்நவிஸ் இன்று பதவியேற்றார்.

2. நம் நாட்டின் கலாச்சார, ஆன்மிக, வரலாற்று பாரம்பரியத்தை கொண்டாடும் வகையில், அரசியல் சாசனம் திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சிறு வணிகர்களுக்கான சிறப்பு கடன் முகாம் நாளை தொடங்கி, வரும் 12-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது

4. அறிவியல் ஆராய்ச்சிப்பணிகளில் ஐந்தாண்டுகள் இணைந்து செயல்படுவதற்கான கூட்டு திட்டத்தை இந்தியாவும் - ஸ்லோவேனியாவும் அறிவித்துள்ளன.

5. குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Mansi Singh** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<>>>>>**

மகாராஷ்ட்ரா மாநில முதலமைச்சராக பிஜேபி-யின் திரு தேவேந்திர பட்நவிஸ் இன்று பதவியேற்றுக்கொண்டார்.

மும்பை ஆசாத் மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அம்மாநில ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன் அவருக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

இந்த நிழ்ச்சியில் துணை முதலமைச்சர்களாக சிவசேனாவின் திரு ஏக்நாத் ஷிண்டே மற்றும் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் திரு அஜித் பவாரும் பதவியேற்றுக்கொண்டனர்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ஜெ பி நட்டா உட்பட பலர் இந்த பதவியேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்றனர். தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிப்பொறுப்பில் இருக்கும் மாநிலங்களின் முதலமைச்சர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். 288 உறுப்பினர்களை கொண்ட மகாராஷ்ட்ரா சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் பிஜேபி தலைமையிலான கூட்டணி 230 தொகுதிகளில் வெற்றிபெற்றது.

**<<<<<<>>>>>**

நம் நாட்டின் கலாச்சார, ஆன்மிக, வரலாற்று பாரம்பரியத்தை கொண்டாடும் வகையில், அரசியல் சாசனம் திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக, மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் நாளிதழ் ஒன்றில் எழுதியுள்ள கட்டுரையையும் பகிர்ந்துள்ளார்.

இந்த கட்டுரையை அனைவரும் முழுமையாக படிக்குமாறும் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>

நாடாளுமன்ற நடவடிக்கைகளை முடக்கும் வகையில் எதிர்க்கட்சிகள் செயல்படுவது கண்டிக்கத்தக்கது என்று மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதை சுட்டிக்காட்டினார்.

அவை நடவடிக்கைகளில் பங்கேற்று, ஆக்கப்பூர்வமான விவாதங்களில் கலந்துகொள்ளாமல் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவது ஏற்புடையது அல்ல என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

நாடு முழுவதும் கடந்த பத்தாண்டுகளில் 10 ஆயிரத்து 500 புதிய அஞ்சலகங்கள் திறக்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு சந்திரசேகர் பெம்மசானி கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இதில் 90 சதவீதம் ஊரகப்பகுதிகளில் திறக்கப்பட்டுள்ளதாக கூறினார். ஒரு லட்சத்து 65 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அஞ்சலகங்கள் தற்போது செயல்பட்டு வருவதாகவும் 4 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் அதில் பணியாற்றி வருவதாகவும் திரு சந்திரசேகர் பெம்மசானி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

சட்டமேதை அம்பேத்கரின் கனவை நனவாக்கும் வகையில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக சட்ட அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் கூறியுள்ளார். புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நலிவடைந்த பிரிவினரின் மேம்பாட்டிற்காக மத்திய அரசு செயல்படுத்திவரும் திட்டங்களை பட்டியலிட்டார். அம்பேத்கரின் பங்களிப்பை உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில், சர்வதேச மையம் புதுதில்லியில் ஏற்படுத்தப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார். சமூக நீதிக்காக மட்டுமின்றி, நிதிநிர்வாகத்திற்கான அடித்தளத்திற்கும் வித்திட்டவர் அம்பேத்கர் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

நிதி ஆணையத்தை ஏற்படுத்தியதில் அம்பேத்கரின் கருத்துக்கள் முக்கிய பங்கு வகித்ததாகவும் திரு அர்ஜூன் ராம் மெக்வால் கூறினாா.

<<<<<<>>>>>

ஜார்கண்ட் அமைச்சரவை இன்று விரிவாக்கம் செய்யப்பட்டது.

ராஞ்சியில் உள்ள ஆளுநர்மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 11 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்டனர்.

அம்மாநில ஆளுநர் திரு சந்தோஷ்குமார் கங்வார், புதிய அமைச்சர்களுக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

புதிய அமைச்சர்களில் ஆறு பேர் ஜார்கண்ட் முக்தி மோர்ச்சாவை சேர்ந்தவர்கள் என்றும், நான்கு பேர் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்கள் என்றும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

அறிவியல் ஆராய்ச்சிப்பணிகளில் ஐந்தாண்டுகள் இணைந்து செயல்படுத்துவதற்கான கூட்டு திட்டத்தை இந்தியாவும் - ஸ்லோவேனியாவும் அறிவித்துள்ளன.

அரசுமுறைப்பயணமாக புதுதில்லி வந்துள்ள ஸ்லோவேனியா உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் **Igor Papic**-வுடன் நடத்திய பேச்சுக்களுக்கு பின்னர் பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் இதற்கான அறிவிப்பை வெளியிட்டார்.

அறிவியல் தொழில்நுட்பத்துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான அம்சங்கள் இந்த பேச்சுக்களில் இடம்பெற்றதாக அவர் கூறினார்.

இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு உலகளாவிய வளர்ச்சிக்கும் உதவிடும் என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

இந்தியா – பூட்டான் இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்பதில் இருநாடுகளும் பரஸ்பரம் உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அரசு முறைப்பயணமாக புதுதில்லி வந்துள்ள பூட்டான் அரசர் **Jigme Khesar Namgyel Wangchuk**–ஐ சந்தித்தப்பின் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பூட்டானின் வளர்ச்சிக்காக அந்நாட்டு அரசரின் தொலைநோக்கு பார்வை தமக்கு வியப்பை ஏற்படுத்தியதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

முன்னதாக, இரண்டு நாள் பயணமாக வந்துள்ள பூட்டான் அரசரை விமான நிலையத்தில் வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் வரவேற்றார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கடலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களை சேர்ந்த சிறு வணிகர்களுக்கு, சிறப்பு வணிகக்கடன் திட்டத்திற்கான முகாம் நாளை தொடங்கி, வரும் 12-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாக கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே ஆர் பெரியகருப்பன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம், இந்த சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளதாக கூறியுள்ளார்.

இதில், தகுதியானவர்களுக்கு குறைந்த வட்டியில் 10 ஆயிரம் முதல், ஒரு லட்சம் ரூபாய் வரை சிறு வணிகக்கடன் வழங்கப்பட உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் கள்ளக்குறிச்சி கள்ளாச்சாராய சம்பவம் தொடர்பான வழக்கின் விசாரணை வேகமாக நடைபெற்று வருவதாக மாநில சட்ட அமைச்சர் திரு ரகுபதி கூறியுள்ளார். சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவான நீதியை பெற்றுத்தர வேண்டும் என்ற நோக்கிலேயே சிபிஐ விசாரணைக்கு எதிராக தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் 17 பேர் குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்நிலையில், சிபிஐ விசாரணைக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது, விசாரணையின் வேகத்தை குறைக்கும் என்பதால்தான் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இதில், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி, அரசியல் செய்வது கண்டிக்கத்தக்கது என்றும் திரு ரகுபதி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Mansi Singh** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 17-21, 21-13, 21-9 என்ற செட் கணக்கில் சீன தை-பேயின் **Chen Su Yu**-வை வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவுகளில் ஆயுஷ் ஷெட்டி, ரவி, சதீஷ்குமார் கருணாகரனும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

கலப்பு இரட்டையர் பிரிவுகளில் **Dhruv Kapila – Tanisha Crasto** இணையும், **Ashith Surya – Amrutha Pramuthesh** –இணையும், **Rohit Mohan Kumar – Riduvarshini Ramasamy** இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

-----------------

செவித்திறன் குறைபாடு கொண்டவர்களுக்கான ஆசிய பசிபிக் விளையாட்டுப்போட்டியின் பேட்மிண்டன் பிரிவில் இந்தியா 2 வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

மலேசியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், ஆடவர் ஒற்றையர் பிரிவில் அபினவ் சர்மா-வும், கலப்பு இரட்டையர் பிரிவில் **Jerlin Anika Jayaratchagan – Abhinav Sharma** இணையும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Jerlin Anika Jayaratchagan** -னும், மகளிர் இரட்டையர் பிரிவில் **Jerlin Anika Jayaratchagan – Aaditya Yadav** –இணையும், ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Piyush** –ம் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

இப்போட்டியில், இந்தியா இதுவரை ஒரு தங்கம், ஒன்பது வெள்ளி, ஒன்பது வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் ஒன்பதாவது இடத்தில் உள்ளது.

---------------

20 மற்றும் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான இந்திய மகளிர் கால்பந்து அணிக்கான தலைமை பயிற்சியாளராக ஸ்வீடனின் **Joakim Alexandersson** நியமிக்கப்பட்டுள்ளார்.

**<<<<<<END>>>>>**